1973 நவம்பர் 22]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்பதற்குக்கூட விவரம் இப்போது என் கைவசம் இல்லை. ஆனால் இதில் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஏனெனில் ஊட்டியில், தேவராசன் அவர்கள் இடத்தில், உருளை பயிர் செய்து 'கோல்டன் நெமட்டோட்' பூச்சி வந்து அரித்து அந்தப் பூச்சிகளிடமிருந்து பயிரை அதாவது கிழங்கை எப்படிக் காப்பாற்றுவது என்பது பற்றி ஜெர்மன் நிபுணர்களுக்குக்கூடத் தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மேற்கொண்டு விஸ்தரிப்பது என்பதில், சிறிது எச்சரிக்கையோடு விஸ்தரிக்க வேண்டுமென்று நாம் கருதுகிறோம்.

திரு. கு. ஆ. பொம்மன்: தலைவரவர்களே, விவசாயிகளுக்குத் தரமான விதைகள் தரப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தரமான விதைகள் எங்கேயிருந்து உற்பத்தி செய்யப்பட்டுக் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தற்போது வரும் உருளைக்கிழங்கு விதைகள் ஊட்டி பகுதியில் இருந்து தான் வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் தென்னந் தோப்புகள்

*321 வின—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கருவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் தென்னந்தோப்புகளை உருவாக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கரில் உருவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) ஆம்.

(இ) வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று, மதுரை மாவட்டத்தில் நான்கு ஆண்டு காலத்தில் ஐயாயிரம் ஏக்கர் நிலத்தில் தென்னந்தோப்புகள்

வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் ரூ. 137 லட்சம் மூலதனத்திற்குத் தன் பொதுவான ஒப்புதலை வழங்கியுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, உருவாக்க இருக்கும் தென்னந்தோப்புகள் மதுரை மாவட்டத்தின் எந்தெந்தப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது? தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இடங்கள் எவையெவை என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் மதுரை தெற்கு, மதுரை வடக்கு, மேலூர், திண்டுக்கல், திருமங்கலம், நிலக்கோட்டை, வேடசந்தூர், பழனி உசிலம்பட்டி, பெரியகுளம், உத்தமபாளையம் ஆகிய இடங்களில் பயிரிடத் திட்டம் செயல்பட இருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் விவசாய ஆராய்ச்சி நிலையம்

* 322 வினா—**திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சேலம் மாவட்டத்தில் தற்போது மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இம்மாதிரியான விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் அல்லது கூடங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்த அரசிடம் திட்டமுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த கேள்வி மரவள்ளிக் கிழங்கைப் பற்றியது. அதாவது டாபியோகா. இந்தக் கிழங்கு கடலோரப் பகுதிகளிலும், மணற்பாங்கான பகுதிகளிலும், தொளதொளப்பான சாயில்களிலும் உற்பத்தியாகிறது. சேலம் ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடிக்கப் பட்ட எஸ். 4 ஒரு ஏக்கருக்கு 15 டன் 10 மாதங்களுக்குக் கொடுக்கிறது. ஆனால் தஞ்சை மாவட்டத்தில், களி மண்